## இனிமையான குழந்தைகளே! தேக சகிதமாக அனைத்தையும் மறந்து முழுமையான பிச்சைக்காரர் ஆக வேண்டும். சிவபுரி மற்றும் விஷ்ணுபுரி மீது தன்னுடைய புத்தியோகத்தைச் செலுத்துங்கள்

கேள்வி: எந்த விசயத்தில் குழந்தைகளாகிய நீங்கள் பாபாவுக்குச் சமமாக பரந்த மனதுடையவர் ஆக வேண்டும்?

பதில்: எப்படி பாபா பரந்த மனதுடையவராகி குழந்தைகளாகிய உங்களிடமிருந்து எதற்கும் பயன்படாதவைகளை எடுத்துக் கொண்டு உங்களுக்கு உலக இராஜ்யத்தைக் கொடுக்கின்றாரோ, அதுபோல நீங்களும் பரந்த மனதுடையவர் ஆக வேண்டும். ஆங்காங்கே ஆன்மீக பல்கலைக் கழகம் திறக்க வேண்டும். 3 அல்லது 4 பேர் உயர்ந்த பதவி அடைந்தாலும் மிகப்பெரிய சௌபாக்கியம் ஆகும். நல்ல குழந்தைகளாகி சத்குருவை வெளிக்காட்ட வேண்டும். ஒருபோதும் யாரிடமும் பைசா (பணம்) போன்றவற்றை கேட்காதீர்கள்.

பாடல்: குழந்தைப் பருவத்தை மறக்காதீர்கள்............

இந்த அனைத்துப் பாடல்களும் குழந்தைகளை மகிழ்விப்பதற்கே ஆகும். பாப்தாதா மற்றும் மம்மா இருக்கிறார்கள். உண்மையில் இரண்டு அம்மாக்கள் (மம்மாக்கள்) இருக்கின்றனர், அதாவது அம்மா மற்றும் பாட்டி (தாதி) ஆவர். இவர் உங்களுக்கு பாட்டியாகவும் இருக்கிறார். நீங்கள் பிரம்மாவின் குழந்தைகள் மற்றும் சிவனின் பேத்திகள் ஆவீர்கள். மம்மா கூட பிரம்மாவின் மகள் சரஸ்வதி ஆவார். மேலும் சிவபாபாவின் பேத்தி ஆவார். குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக ஜெகதம்பா நிமித்தமாகி இருக்கிறார். சிவபாபா பல ரூபமுடையவர் ஆவார். அவர் மிகுந்த திருவிளையாடல் செய்கிறார். அதுவும் கேளிக்கையாக இருக்கிறதல்லவா! நிச்சயம் செய்யும் போது, மிகுந்த விளையாட்டுகள் நடக்கின்றன. மேலும் திருமண நேரத்தில் இருவரும் கிழிந்த ஆடைகளை (சம்பிரதாயத்திற்காக) அணிகின்றனர், எண்ணெய் பூசுகின்றனர். இது கூட இங்கே (சங்கம யுகத்தில்) நடப்பதன் அடையாளச் சின்னங்கள் தான். குழந்தை களாகிய நீங்களும் 'முழுமையான பிச்சைக்காரர் ஆகுங்கள்' என்று பாபா புரிய வைக்கிறார். ஒன்றுமே இருக்காது, பிறகு அனைத்தும் கிடைத்து விடும். தேக சகிதம் எதுவுமே இருக்காது. சிவபுரி மற்றும் விஷ்ணுபுரி மீது தன்னுடைய புத்தியோகத்தைச் செலுத்துங்கள். வேறு எந்த பொருள் மீதும் உங்கள் ஈடுபாடு இருக்கக் கூடாது. பாருங்கள், பாபா குழந்தைகளை எவ்வளவு மகிழ்வூட்டுகிறார். இது கூட பாபாவின் பலவிதமான லீலைகளாகும். பாருங்கள், மீராவைப் பற்றி எத்தனைப் பாடல்கள் இருக்கின்றன. இந்த தூய்மைக்காக மட்டுமே உலகாயத கௌரவம் ஆகும். மீராவின் பெயர் எத்தனை பிரசித்தமாகியுள்ளது. அவருக்கோ அமிர்தம் கூட கிடைக்க வில்லை. கிருஷ்ணரின் மேல் அன்பு மட்டும் இருந்தது. கிருஷ்ணபுரிக்குச் செல்ல வேண்டும் என்பதனால் விஷத்தை விட்டு விட்டார். கணவனைத் தொடர்ந்து மனைவியும் சதி ஏறுகிறாள் (கணவனோடு தன்னையும் தீயில் மாய்த்துக் கொள்ளுதல்) அல்லவா! இங்கே அப்படி எதுவுமில்லை. மீரா நினைவு செய்து செய்து, கிருஷ்ணபுரிக்கு ஒன்றும் செல்லவில்லை. அப்போது கிருஷ்ணபுரி

என்பதே இருக்கவில்லை. மீரா 500-700 வருடங்கள் முன்பு இருந்திருப் பார். நல்ல பக்தையாக இருந்த காரணத்தினால், ஏதேனும் பக்தரின் வீட்டுக்குச் சென்று பிறவி எடுத்திருப்பார். மீராவின் பெயருக்கு பல காலமாக புகழ் பாடப்பட்டு வருகிறது. ஆனால் இவரோ பக்தை மீராவாகத் தான் இருந்தார். நீங்கள் உண்மை யான ஞான மீராக்கள் ஆகின்றீர்கள். நீங்கள் இங்கு வந்திருப்பதே சூரியவம்ச, சந்திரவம்ச, மஹாராணி ஆவதற்குத் தான். ஆரம்பத்தில் படிக்காதவர்கள் படித்தவர்கள் முன்பு சுமை தூக்கினாலும், இப்போது கண்டிப்பாக மஹாராணி ஆகப் போகின்றீர்கள் அல்லவா! ஒருவேளை குழந்தைப் பருவத்தை மறந்து பாபாவின் கையை விட்டுவிட்டால், பிறகு ஒருபோதும் மஹாராணி ஆகமுடியாது. மேலும் அவர்கள் பிரஜையிலும் கீழான பதவி அடைவார்கள். வைகுண்டத்திற்கு வருவார்கள். ஆனாலும் குறைந்த பதவி அடைவார்கள். பாபா புரிய வைத்திருக்கிறார், பக்தி செய்பவர்களிடம் கூட கேளுங்கள் - நீங்கள் என்ன அடைய விரும்புகின்றீர்கள்? கிருஷ்ணரை ஏன் பக்தி செய் கின்றீர்கள்? கண்டிப்பாக அவருடைய இராஜ்ஜியத்திற்கு செல்ல வேண்டும் என்று மனதில் விரும்புகின்றார்கள். ஆனால் அங்கே எப்படிச் செல்வது? நிறைய மனிதர்கள் எங்களுக்கு அமைதி வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் முழு உலகமுமே அசாந்தியாக இருக்கின்றது. உங்கள் ஒருவருக்கு அமைதி கிடைப்பதன் மூலம் என்ன நடக்கும்! எங்களால் உங்களை 21 பிறவிகளுக்காக சதா சுகம் நிறைந்தவராக மாற்ற முடியும். இந்த பாரதத்தில் தான் தேவதைகள் சதா சுகம் நிறைந்தவர்களாக இருந்தார்கள். இப்போது அந்த இராஜ்ஜியம் ஸ்தாபனை ஆகிக்கொண்டிருக்கிறது. இங்கே நடப்பதோ மாயையின் இராஜ்யமாகும். சாந்தியைப் பெற முடியாது. சாந்திக்காக தனியான இடம் மற்றும் சுகத்திற்காக தனியான இடம் உள்ளது. சுகதாமம் என்றாலே அங்கே அனைவரும் சுகமானவர்களாக இருப்பார்கள். ஒருவர் கூட அங்கே துக்கமானவர் கிடையாது. மேலும் துக்கதாமத்தில் ஒருவர் கூட சுகமாக இருப்ப தில்லை. ராஜா எப்படியோ, அதுபோல பிரஜைகள் அனைவருமே இங்கே துக்கமே துக்கமாய் இருக்கின்றனர். சுகதாமத்தில் விலங்குகள் கூட ஒருபோதும் துக்கமடைவதில்லை. சாந்திக்கான உலகம் தனிப்பட்டது. அதைத்தான் நிர்வாண் தாமம் என்று சொல்கிறோம். புத்தர் நிர்வாண் தாமம் சென்றார் என்று சொல்கிறார்கள். ஆனால் ஒருவர் கூட செல்லவில்லை. அவர் மட்டும் சென்றார் என்றால் பிறகு இங்கே என்ன செய்துவிட்டுச் சென்றார்! இங்கே அனைவரும் துக்கமே துக்கமாக இருக்கின்றனர். அனைவரும் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.பர்மா மற்றும் சிலோன் புத்தரை பின்பற்று பவர்கள். அவர்களும் ஹிந்துக்களை வெளியேறச் சொல் கிறார்கள். அவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. இப்போது பாபா கூடப் பார்க்கிறார், அனேக தர்மங்கள் ஆகிவிட்ட காரணத்தால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. ஆகையால் அனைவரையும் ஒரேயடியாக வெளியேற்றி விடுகிறார். சத்யுகத்தில் ஒரே ஒரு தர்மம் தான் இருக்கிறது. இந்த அனைத்து ஞானமும் குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் இருக்கிறது. சித்திரங்களைக் கையில் எடுத்துக் கொண்டு வானப்பிரஸ்திகளுக்கு (வயது முதிர்ந்தவர்களுக்கு) சேவை செய்ய வேண்டும். கோயில்களில் நுழைந்து விட வேண்டும். அவர்களிடம் சென்று உரையாடல் செய்ய வேண்டும். சங்கருக்கு முன்பு சிவலிங்கம் காட்டுகிறார்கள். ஆக அவர் கண்டிப்பாக சங்கரை விட உயர்ந்தவராகி விடுகிறார் அல்லவா! ஒருவேளை சங்கரர் தான் பகவானின் ரூபம் என்றால் அவருக்கு முன்னால் சிவலிங்கம் வைக்க வேண்டிய அவசியம் என்ன? இந்த அனைத்தும் சன்னியாசிகளின்

பிரச்சாரம் ஆகும். அவர்கள் தேவதா தர்மத்தைச் சேர்ந்தவர்களே கிடையாது. அவர்களோ தன்னை பிரம்ம ஞானி, தத்துவ ஞானி என்று சொல்லிக் கொள்கிறார்கள். சிவனைப் பற்றி அவர்களுக்கு தெரிவது கூட கிடையாது. தத்துவம் என்பது இருப்பதற்கான இடம் அகும். அவர்கள் பிரம்மத்தையும், தத்துவத்தையும் கூட ஒன்றென ஏற்றுக் கொள்வதில்லை. நல்லது பிரம்ம ஞானி, தத்துவ ஞானி என்றால் பிறகு தன்னை ஏன் சிவன் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அவர்கள் சிவனும் பிரம்மமும் ஒன்று தான் என்று புரிந்து கொள்கிறார்கள். அனைத்தும் ஒன்றாகவே இருக்கும் போது மூன்று பெயர்கள் ஏன் வைத்தார்கள். சிவனுக்கோ லிங்க ரூபத்தில் பூஜை நடக்கிறது. பிரம்மம் அதாவது தத்துவத்தின் பூஜையை யாரேனும் காட்டுவார்களா! அதுவோ வசிப்பதற்கான இடமாகும். மனிதர்கள் மிகவும் குழம்பிப் போய் இருக்கின்றனர். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் புத்திசாலிகளாக ஆக வேண்டும். சன்னியாசி களிலிருந்தும் கூட யாராவது வருவார்கள், யார் உண்மையில் தேவி-தேவதா குலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ, அவர்கள் உடனே எடுத்துக் கொள்வார்கள். யாராவது 3-4 பிறவிகளாக வேறு தர்மத்திற்கு மாறிவிட்டிருந் தார்கள் என்றால், அவ்வளவு விரைவாக வர மாட்டார்கள். இந்த பிறவியில் புதிதாக மாறியிருந்தார்கள் என்றால், உடனே வந்து விடுவார்கள். பாபாவிடம் கவர்ச்சி இருக்கிறது அல்லவா. ஆத்மாக்கள் ஊசிகளைப்போல், பாபா காந்தமாக இருக்கிறார். இப்போது ஊசிகளின் மேல் துரு பிடித்திருக்கிறது. துருபிடித்த ஊசி மேலே எப்படி செல்லும். துருபிடித்த பொருட்கள் குப்பையில் போடப்படுகிறது. பாபா இந்த ஞான அமிர்தத்தின் மூலம் அனைவருடைய அழுக்கையும் நீக்குகிறார். பிறகு நாம் உண்மையான தங்கமாக மாறிவிடுவோம். நீங்கள் இப்போது கல்லிலிருந்து தங்கமாக ஆகின்றீர்கள். பாரதம் சொர்ணபுரி யாக இருந்தது. இப்போது தங்கத்தின் விலை எவ்வளவு அதிகரித்து விட்டது. பிறகு அங்கே (சத்யுகத்தில்) மிகவும் மலிவாகிவிடும். இப்போது இந்த பாரதம் கற்கள் நிறைந்த இடமாகி விட்டது. பிறகு சொர்ண புரியாக (தங்கயுகம்) ஆகிவிடும். நம்முடைய புத்தியில் அந்த சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறது. முழு நாளும் புத்தியில் சக்கரம் சுற்றிக் கொண்டிருந்தால் தான் சக்கரவர்த்தி இராஜா-இராணியாக ஆவீர்கள். உலகத்தில் யாரும் இந்த விஷயத்தை தெரிந்திருக்க வில்லை. சத்யுகத்தில் யார் இராஜ்யம் செய்கிறார்களோ, அவர்களுக்கு 84 பிறவிகளும், திரேதாயுகத்தை சேர்ந்தவர்களுக்கு கண்டிப்பாக குறைவான பிறவிகளே இருக்கும், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். 84 பிறவிகள் எங்கே, 84 லட்சம் பிறவிகள் எங்கே, இப்படியெல்லாம் காட்டு கிறார்கள். பிறகு இவ்வளவு பிறவிகள் எடுக்க வேண்டும் என்றால், கல்பத்தின் ஆயுளும் அவ்வளவு வேண்டும். அனைத்தும் கட்டுக் கதைகளாகும். எப்போதும் முதலில் படத்தை கொடுத்து விட வேண்டும். ஒருபோதும் பைசா வாங்காதீர்கள். உங்களுடைய வேலை அவர்களுக்கு கொடுப்பதாகும். ஏதும் கொடுக்க வேண்டும் என்றால் அவர்களே கொடுப்பார்கள். ஏதாவது விலை கேட்டால், பாபா ஏழைப் பங்காளன் என்று சொல்லுங்கள். ஏழைகளுக்கு இலவசமாகும். மற்றபடி செல்வந்தர்கள் எவ்வளவு கொடுப்பார்களோ அவ்வளவு நாங்கள் இன்னும் கூட அச்சடிப்போம். பணத்தை ஒன்றும் நாங்கள் எங்களுடைய காரியத்தில் ஈடுபடுத்துவதில்லை. எவ்வளவு கிடைக்கிறதோ அதை மற்றவர்களுடைய வேலையில் தான் ஈடுபடுத்தப்படுகிறது. செல்வந்தர்கள் தான் தர்மசாலை போன்றவைகள் உருவாக்குவார்கள் அல்லவா. ஏழைகளும் உருவாக்க முடியும், இதில் செலவு ஒன்றும் இல்லை. கக்கோட் கிராமத்தின் மாதா நான் சென்டர்

திறக்கட்டுமா, என்று கேட்பதைப் போல் ஆகும். இப்படிப்பட்ட இறை பல்கலைக் கழகத்தில் 3-4 பேர்கள் கூட நல்ல பதவி அடைந்து விட்டார்கள் என்றால் அவர்களுக்கு நல்ல சௌபாக்கியமாகும். இதில் பரந்த மனம் இருக்க வேண்டும். பாபாவை பாருங்கள் எவ்வளவு பரந்த மனம் உடையவராக இருக்கிறார். எதற்கும் பயன்படாதவைகளை எடுத்துக் கொண்டு இராஜ்யத்தைக் கொடுத்து விடுகிறார். நல்ல குழந்தைகள் தான் பாபாவின் சேவை செய்ய முடியும். சொல்படி கேட்காதவர்கள் என்ன செய்வார்கள். சொல்படி கேட்காதவர் களுக்கு பாபா ஆஸ்தி கொடுப்பாரா என்ன? நீங்களும் கூட சத்குருவை வெளிக்காட்ட வேண்டும். காமம் அல்லது கோபத்தில் வந்தீர்கள் என்றால் சத்குருவை நிந்தனை செய்தவர்களாவீர்கள், பிறகு பதவி அடைய முடியாது. மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

நீங்கள் அனைத்து தர்மத்தைச் சேர்ந்தவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். முஸ்லீம் களுக்கும் புரிய வைக்க வேண்டும் - நீங்கள் இறைவனை வழிபாடு (குதாவின் பந்தகி) செய்கிறீர்கள் என்றால் கண்டிப்பாக அடிமைகள் தான். சரி குதா (பகவான்) எங்கே இருக்கிறார்? குதாவின், படைப்பவர் மற்றும் படைப்பின் ஞானத்தை சொல்ல முடியுமா? அவர் சாந்திதாமத்தில் இருக்கிறார். அவரை நினைவு செய்வதின் மூலம் நீங்கள் அமைதியின் ஆஸ்தியை எடுக்க முடியும். ஆஸ்தியை எடுத்து-எடுத்து பாவகர்மங்கள் வினாசமாகிவிடும் மேலும் பிறகு நீங்கள் குதாவிடம் சென்று விடுவீர்கள். இந்த ஞானம் அனைத்து தர்மத்தை சேர்ந்தவர்களுக்கும் ஆகும். இது முற்றிலும் புதிய விஷயமாகும். ஞானத்தின் மூலம் உங்களுடைய துக்கம் போய் விடுகிறது மேலும் வேறு எங்கும் செல்வதற்கான அவசியமும் இருப்பதில்லை. ஆகவே குழந்தைகளே நீங்கள் சொர்க்கத்திற்கு செல்கிறீர்கள் என்றால், கண்டிப்பாக தூய்மையாக ஆக வேண்டும். பாருங்கள் பாரதத்தில் தூய்மை இல்லாத காரணத் தினால் ஏமாற்றம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு குழப்பங்கள் இருக்கிறது - காந்திஜி என்ன கற்றுக் கொடுத்து விட்டு சென்றாரோ அதை பிரஜைகள் பின் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். தோட்டி, தொழிலாளிகள், டிரைவர்கள் போன்றோர் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால், அரசாங்கத்திற்கு மிகவும் இடர்பாட்டை ஏற்படுத்தி விடுகிறார்கள். இவ்வளவு செலவு எங்கிருந்து செய்ய முடியும் என்று அரசாங்கம் அவர்களுக்கு தெளிவாக சொல்லி விடுகிறது. அப்போது அரசாங்கத்திடம், நீங்கள் ஆனந்தம் அனுபவிக்கிறீர்கள், செல்வத்தை சேர்த்துக் கொண்டே இருக்கிறீர்கள், என்று அவர்கள் (தோட்டி, தொழிலாளிகள், டிரைவர்கள்) சொல்கிறார்கள். நாங்கள் குற்றம் செய்தோமா என்ன? எங்களுக்கு ஊதியம் வேண்டும். வேலை நிறுத்தம் செய்து விடுகிறார்கள் என்றால் வேலை நின்று விடுகிறது. இவை அனைத்தும் நடக்கத்தான் வேண்டும். சில இடங்களில் தானியங்கள், காய்கறிகள் கிடைக்காது, பால் கிடைக்காது. ஆங்காங்கே சண்டை நடக்கிறது. இந்த அனைத்து குழப்பங் களும் நடந்து அமைதி ஏற்படும்.அர்ஜுனனுக்கு வினாசத்தினுடைய மற்றும் விஷ்ணுபுரி யினுடைய காட்சி செய்வித்தார் அல்லவா. உங்களுக்கும் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. பாருங்கள் நீங்கள் எவ்வளவு செல்லக் குழந்தைகளாக இருக்கிறீர்கள். நிறைய பிறவிகளின் கடைசியில் வந்து சேர்ந்துள்ளீர்கள் எனும்போது முழு சௌபாக்கியத்தையும் அடையுங்கள்.

(மழை வேகமாக பொழிந்து கொண்டிருந்தது) பாருங்கள் பாபாவின் ஞான

மழையும் நிறைய பொழிந்தது, அந்த மழையும் கூட அதிகம் பொழிகிறது. மழைக்காக கூட யக்ஞும் படைக் கிறார்கள், அமைதிக்காகவும் யக்ஞும் படைக்கிறார்கள், ஆனால் ஒரு பகவான் தான் அமைதி நிறைந்தவர் ஆவார். அவர் வந்தால் தான் அமைதியின் தானம் கொடுக்க முடியும். கொடுக்கக் கூடியவர் அவர் தான் அல்லவா. நல்ல குழந்தைகளை 'டோல்புட் (பெற்றோருக்கு தோள் கொடுக்கும் குழந்தை) ' என்று சொல்லப்படுகிறது. இனிப்பு வழங்கப்படுகிறது, அது ஸ்தூல இனிப்பாகும், இது ஆன்மீக இனிப்பாகும், இதை ஆன்மீக தந்தை கொடுக்கின்றார். ஆத்ம- அபிமானியாக ஆகி இருப்பது மிகப்பெரிய குறிக்கோளாகும், இதில் உழைப்பு இருக்கிறது. 8 மணி நேரமாவது ஆத்ம-அபிமானியாக ஆகுங்கள், என்று பாபா கூறுகின்றார். பிறகு சரீர நிர்வாகத் திற்காகவும் வேலை செய்யுங்கள். இரவில் எழுந்தீர்கள் என்றால் மிக நல்ல ஈடுபாடு ஏற்படும். வருமானம் அல்லவா. ஹே தூக்கத்தை வெல்லக்கூடிய குழந்தைகளே! என்னை மூச்சுக்கு மூச்சு நினைவு செய்யுங்கள். ஞான சிந்தனை செய்யுங்கள். இரவும் பகலும் எவ்வளவு யோகத்தில் இருப்பீர்களோ, அவ்வளவு விகர்மங்கள் (பாவ கர்மங்கள்) வினாசம் ஆகும். எந்தளவிற்கு ஞானத்தை சிந்தனை செய்வீர்களோ, அந்தளவிற்கு வருமானம் கிடைக்கும். மற்றபடி சேவை அதிகமாக இருக்கிறது. பாபாவை கேட்டீர்கள் என்றால், உட்கார்ந்து கொண்டே இருங்கள் என்று கூறுவார். ஓய்வு எடுங்கள். இதில் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. பாபா உலகாயத கௌரவத்தைப் பற்றி ஏதாவது சிந்தனை செய்தாரா என்ன! அட இராஜ்யம் கிடைக்கிறது. மற்றபடி ஒவ்வொருவருக்கும் அவரவருடைய நடிப்பு இருக்கிறது. பிறகு பாபாவிடம் கேட்க வேண்டும். ஒவ்வொருவரும் அவரவருடைய வழியை கேட்க வேண்டும், ஏனென்றால் ஒவ்வொருவருடைய கர்மபந்தனம் தனிப்பட்டதாகும். பைசா இருக்கிறது என்றால் அலௌகீக சேவையில் பயனுடையதாக்க வேண்டும். குழந்தைகள் மகாவீராக ஆக வேண்டும். என்னுடையவர் ஒரு சிவபாபா மட்டும் தான், வேறு யாரும் கிடையாது என்றும் பாடப் பட்டுள்ளது. அவர் தான் அனைவருக்கும் தந்தை ஆவார். சிவபாபா சொல்கிறார், நான் அனைவரையும் திரும்பி அழைத்துச் செல்ல வந்திருக்கின்றேன். இந்த உலகில் ஒரு மனிதன் கூட திரிகால் தரிஷியாகவோ, ஆஸ்திகராகவோ இல்லை என்று பாபா சொல்கிறார். அனைவருமே நாஸ்திகர்களாக இருக்கின்றனர். தந்தையைத் தெரிந்திராதவர்களாக இருக்கின்றனர். மற்றபடி ரித்தி சித்தி தெரிந்தவர் கள் நிறைய பேர் இருக்கின்றார்கள். மாயையும் ஒன்றும் குறைந்ததில்லை, இந்த மாயை மீது தான் வெற்றி அடைய வேண்டும். ஆகையினால் கவசம் இருந்து கொண்டே இருக்க வேண்டும். கவசத்தின் அர்த்தமே மன்மனாபவ ஆகும். சிவபாபாவை நினைவு செய்யுங்கள், ஆத்மாபிமானி யாக ஆகுங்கள். இந்தக் கடைசிப் பிறவியில் நீங்கள் ஒரே முறை தான் ஆத்ம அபிமானிகளாக ஆகின்றீர்கள். பிறகு சத்யுகத்திலிருந்து கலியுகம் வரை இந்த ஆத்ம அபிமானி ஆவதற்கான படிப்பினையை யாரும் கொடுப்பதே இல்லை. இந்த சமயத்தில் தான் ஆத்ம அபிமானி ஆக வேண்டி யிருக்கிறது, ஏனெனில் இப்போது சரீரத்தை விட்டுவிட்டு என்னிடத்தில் வர வேண்டும். தேவதைகள் ஏன் ஆத்ம அபிமானி ஆக வேண்டும், அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டுமா என்ன! இந்த ஞானம் உங்களுக்கு இப்போது கிடைக்கிறது. நீங்கள் அசரீரியாக இருந்தீர்கள், பிறகு இந்த சரீரத்தை எடுத்து நடிப்பை நடித்தீர்கள், பிறகு இப்போது சரீரத்தை விட்டு விட்டு திரும்பிச் செல்ல வேண்டும். தன்னுடைய நிலையை நிலைநிறுத்த

வேண்டும். மாயை மீது வெற்றி அடைய வேண்டும். குடும்ப விவகாரங்களில் என்னவோ இருக்கத்தான் வேண்டும். அன்னப்பறவையும் கொக்கும் ஒன்றாக இருக்கும் போது தடைகள் ஏற்படுகின்றது. அசுரர்களின் கொடுமைகளைக் கூட நிறைய சகித்துத் தான் தீர வேண்டும். வீட்டில் இருந்து கொண்டே உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள், பாபா என்ன நடந்தாலும் நான் உங்களிடமிருந்து கண்டிப்பாக ஆஸ்தி எடுப்பேன். எவ்வளவு அடி வாங்குகிறார்கள்! நாடகத்தின் படி இந்த நடிப்பு கல்பத்திற்கு முன்பு கூட நடந்தது. யார் அதிகம் கொடுமைகளை பொறுத்துக் கொள்கிறார் களோ, அவர்கள் தான் சௌபாக்கியசாலிகள் ஆவர். இருந்தாலும் வந்து சேர்ந்து விடுகிறார்கள் அல்லவா! அவர்களுடைய பலன் உருவாகி விடுகிறது அல்லவா! ஆமாம் இதில் உழைப்பு இருக்கிறது, அசுரனிலிருந்து தேவதை ஆக வேண்டி இருக்கிறது. எதுவரை இந்த உடலில் வாழ்கிறீர்களோ, அதுவரை ஞான அமிர்தம் குடிக்கத்தான் வேண்டும். பாபா புதிய புதிய விசயங்களை புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். யுக்திகள் சொல்லிக் கொண்டே இருக்கிறார். இதை விசார் சாகர மந்தனம் (ஞான சிந்தனை) என்று சொல்லப்படுகிறது. புத்தி என்ற மத்தால் ஞானத்தைக் கடைய வேண்டும். இரவில் கூட சிவபாபாவை நினைவு செய்துவிட்டு உறங்குங்கள், சேவையின் ஆர்வம் இருந்தது என்றால் அவர்களுக்கு உறக்கம் வருமா என்ன! இந்த பாயிண்டில் என்னென்ன புரிய வைக்கலாம் என்று சிந்தனை சென்று கொண்டே இருக்கும். ஞானத்தை நல்லமுறையில் புத்தியில் பயிற்சி செய்ய வேண்டும். ஞானம் தேய்க்கப்படும் போது தான் ராஜ திலகத்தை அடைவதற்கான தகுதி அடைவீர்கள். யார் நல்ல புத்திசாலிக் குழந்தைகளோ, அவர்களைப் பின்பற்ற வேண்டும், மிகப்பெரிய வருமானம் ஆகும். யாரிடம் லட்சம் கோடி இருக்கிறதோ, அவர்கள் அனைவரும் அழிந்து விடுவார்கள். என்ன நடக்கிறது என்று கொஞ்ச காலத்தில் பாருங்கள். பிறகு மனிதர்கள் விழிப்படைவார்கள். சண்டை போன்றவற்றின் ஒத்திகை நடந்து கொண்டே இருக்கும். நல்லது

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. எந்த ஒரு பொருளின் மீதும் பற்று வைக்கக்கூடாது. ஆத்ம அபிமானியாக இருக்க வேண்டு நினைவு என்ற கவசம் எப்போதும் அணிந்து கொண்டிருக்க வேண்டும்.

2. தூக்கத்தை வென்று சுவாசத்திற்கு சுவாசம் பாபாவை நினைவு செய்ய வேண்டும், ஞானத்தை சிந்தனை செய்து வருமானத்தை சேமிக்க வேண்டும். புத்தி என்ற மத்தால் ஞானத்தைக் கடைய வேண்டும்.

வரதானம் : சர்வசக்திவானின் துணையின் அனுபவத்தின் மூலம் அனைத்து பிராப்திகளையும் உணரக்கூடிய திருப்தியான ஆத்மா ஆகுக.

எங்கு சர்வசக்திவான் பாபா இருக்கிறாரோ, அங்கு அனைத்து பிராப்திகளின் அனுபவமும் தானாகவே ஏற்படும். எப்படி விதைக்குள் மரம் அடங்கியிருக்கிறது. அதுபோல சர்வசக்திவான் பாபாவின் துணையில் இருந்தால் சதா செல்வந்தராக, சதா திருப்தியாக, சதா முழுமை யானவராக இருப்பீர்கள். ஒருபொழுதும் எந்த வி^யத்திலும்

பலவீனம் ஆகமாட்டார்கள், புகார் செய்ய மாட்டார்கள், எப்பொழுதும் முழுமையாக இருப்பார்கள். என்ன செய்வது, எப்படி செய்வது. இப்படிப்பட்ட புகார்கள் இருக்காது. ஏன், என்ன என்பதின் வரிசை முடிந்துவிடும். யார் சதா துணையோடு (பாபா) இருக்கிறார்களோ, அவர்கள் துணையோடு தான் செல்வார்கள்.

சுலோகன்: கண்களில் எப்படி கண்ணின் மணி அடங்கியிருக்கிறதோ, அதுபோல் புத்தியில் சிவதந்தையின் நினைவு அடங்கியிருக்கும்.